தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 13, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 26, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்"

உலகில் பெருமையாகப் பேசப்படுவன எல்லாம் வறுமையால் துன்பப்படுபவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றவரின் நிலைத்த புகழைப் பற்றியதே ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 321, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

321—

துணை மின் நிலையம்

***3187—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 26

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலக்கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலக்கோட்டையில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 8 M.V.A. திறன்கொண்ட மின்மாற்றியுடன் 12–வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலக்கோட்டையில் இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கு அருள்மிகு குருநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 68/1–ல் 2.25 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் எண்ணங்களையெல்லாம் ஈடுசெய்வதுதான் தன் வாழ்நாள் கடமை என்ற அடிப்படையில், தமிழக மக்களுக்காக சிறப்பான பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மிகப் பெரிய மின்சார உற்பத்திக்கான திட்டங்களை நேற்றையதினம் அறிவிக்கிறபோது, மதுரை மாவட்டம், கிண்ணிமங்கலத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க உத்தரவிட்டதற்காகவும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலக்கோட்டை பகுதியில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்ட உடனேயே, அதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, துணை மின் நிலையம் அமைப்பதற்கான செயற் திட்டங்களை உருவாக்கி வைத்திருக்கிற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத்*

2013 ஏப்ரல் 26]

துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட இரண்டு இடங்களில் துணை மின் நிலையம் அமைத்தால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் நன்மை பயக்கும். அந்தவகையில், கெடிலம் துணை மின் நிலையம் மற்றும் மணலூர்பேட்டை துணை மின் நிலையம் ஆகிய இரண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அரசு உத்தரவிட்டுள்ளது.*

மணலூர்பேட்டை துணை மின் நிலையத்திற்கு நிலம் மாற்று அனுமதியும் சென்னையிலே வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், வருவாய்த் துறை வட்டாட்சியர் அவர்களால், இதுவரையில் பட்டா மாற்றி ஒப்படைப்பு செய்யப்படவில்லை. அதனால், பணிகள் துவங்கப்படாமல் இருக்கிறது. அதேபோன்று, காட்டுசெல்லூரில் அரசுக்குச் சொந்தமான 8 ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. இதுவரையிலே அந்த தரிசு நிலத்தை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இரண்டு இடங்களிலும் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இரண்டு பகுதிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலங்கள் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களாக இருந்தால், அவற்றைக் கையகப்படுத்தப்படுகின்ற பணியை விரைவுபடுத்தி, அப்பகுதிகளில் விரைவாக துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகள் துவக்கப்படும். ஒருவேளை அங்கே உரிய இடங்கள் கிடைக்காமல், தனியாருக்குச்*

சொந்தமான இடங்கள்தான் இருக்குகின்றன என்றாலும்கூட, விதிமுறைகளுக்குட்பட்டு அதற்குரிய விலையை தமிழ்நாடு மின்சார வாரியம் கொடுத்து, அந்த நிலங்களைக் கையகப்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு அங்கு துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

முற்பகல் 10—05

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது கேட்கக்கூடிய கேள்வி, ஏற்கெனவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு உறுதி அளித்த ஒன்றுதான். பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கரம்பியம் கிராமம் மற்றும் மதுக்கூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கீழக்குறிச்சி ஆகிய பகுதிகளில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு தயாராக இருக்கின்றது. அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதை விரைவிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் ஒன்றியங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இன்றைக்குத் தயார் நிலையிலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். உள்ளபடியே நிலம் கையகப்படுத்தப்பட்டு தயார் நிலையிலே இருந்தால், காலதாமதமின்றி, உடனடியாக, அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

2013 ஏப்ரல் 26]

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 7,000 மின்மாற்றிகள் புதிதாக வாங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். நேற்று 110 விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20,000 மின்மாற்றிகள் புதிதாக வாங்கப்படும் என்றும் அறிவித்திருக்கின்றார்கள். எனது ஆரணி தொகுதியிலே, திருமணி, முனுக்கப்பட்டு, வடுகசாத்து, அடையகுளம் போன்ற பகுதிகளிலே அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைகின்றன. திருமணியில் இருக்கக்கூடிய செயற் பொறியாளரும், வடுகசாத்து பகுதியிலே இருக்கக்கூடிய செயற் பொறியாளரும், அந்தப் பழுதடைந்த மின்மாற்றிகளை சம்பந்தப்பட்ட அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள்மூலம் வண்டியில் ஏற்றி, வேலூருக்குக் கொண்டுசென்று, பழுதுநீக்கம் செய்து அவற்றைக் கொண்டுவந்து மீண்டும் பொருத்தச் சொல்வதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதற்கு அரசிலே வழிவகை இருக்கின்றதா? அப்படி இல்லையென்று சொன்னால், அந்த அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமணி பகுதியிலே, மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைகின்றன என்று சொல்லியிருக்கின்றார். ஆனால், பழுதடைகின்ற மின்மாற்றிகளைப் பழுதுநீக்குகின்றபொழுதும் அல்லது புதிதாக மாற்றி அமைக்கின்றபொழுதும், சம்பந்தப்பட்ட விவசாயிகளே அதைக்கொண்டு வரவேண்டுமென்று மின் துறை அதிகாரிகள் நிர்பந்திப்பதாகச் சொல்கிறார். அப்படிச் செய்திருந்தால், எந்த இடத்திலே, அந்த மாதிரி நிர்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு தகவல் சொன்னால், அந்த அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக எடுக்கும். ஏற்கெனவே, இதுபோன்ற தவறுகளை யாரும் செய்யக்கூடாது என்று அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் மீறி யாராவது தவறு செய்வார்களேயானால், அவர்கள்மீது உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும்.

[2013 ஏப்ரல் 26

மேலும், அங்கே அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைகின்றன என்று சொன்னார். நான் ஓரிரு தினங்களுக்கு முன்புகூட சொன்னேன், அங்கே ஒரே நேரத்திலே, அந்தந்த இடங்களிலே விவசாயிகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், மும்முனை மின்சாரம் வழங்குகின்ற நேரம் தவிர, மீதி நேரங்களிலே இருமுனை மின்சாரம் வழங்கப்படுகிறபோதும், விவசாயப் பெருங்குடி மக்களும், வீட்டு மின் உபயோகிப்பாளர்களும், capacitor *கருவியைப் பொருத்தி, அதன்மூலமாக மின்சாரத்தை உறிஞ்சிவிடுகிறார்கள். அப்படி ஒரே நேரத்தில் மின்சாரம் உறிஞ்சப்படுவதால், அங்கே மின்பளு தாங்காமல் அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைகின்றன. இதுதான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவேதான், இதில் அனைவரும் சற்று ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது அங்கே இருக்கின்ற மக்களுக்கு, உங்களைப் போன்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினைப்பற்றி அறிவுறுத்த வேண்டுமென்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாலும், எல்லா விவசாயப் பெருங்குடி மக்களும் அந்தத் தவறைச் செய்வதால், அதன்மீது சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை, இதை ஒரு வேண்டுகோளாகத்தான் வைக்க முடிகிறது. ஆகவே, இனி வருங்காலத்திலாவது, மும்முனை மின்சாரம் வழங்குகின்ற நேரத்தில் மும்முனை மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும், இருமுனை மின்சாரம் வழங்குகின்றபொழுது அதற்குரிய பயனீட்டாளர்கள் அதைப் பயன்படுத்த வேண்டும். இரண்டு பேரும்* capacitor *கருவியைப் பயன்படுத்தி, ஒரே நேரத்தில் மின்சாரத்தை உறிஞ்சுவதால்தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து, ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, எந்த இடங்களிலெல்லாம் மின்மாற்றிகள் பழுதடைகின்றனவோ, அந்த இடங்களிலெல்லாம் விரைவாக, தேவையான அளவிற்கு மின்மாற்றிகள் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான், நேற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரை இல்லாத அளவிற்கு 20 ஆயிரம் மின்மாற்றிகள் இந்த ஆண்டே வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 10 ஆயிரம் மின்மாற்றிகள்தான் வாங்குவது வழக்கம். இந்த ஆண்டு இரட்டிப்பாக 20 ஆயிரம் மின்மாற்றிகள்*

2013 ஏப்ரல் 26]

வழங்கப்படுகின்றன என்று சொன்னால், எந்த அளவிற்கு மக்கள்மீது அக்கறைகொண்ட முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். அதனால்தான், இப்படிப்பட்ட பணிகள் இன்றைக்கு விரைவாக நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் குறைபாடுகள் இனி நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. அப்படியிருந்தால், அவற்றை எங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்மாபுரம் ஒன்றியம், கீழப்பாளையூர் ஊராட்சியில் 8 M.V.A. திறன் கொண்ட துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அங்கு அதிக மின் மோட்டார்கள் இயங்கி வருகின்ற காரணத்தினால், அங்கு குறைந்த மின் அழுத்தம் காணப்படுகிறது. இதனால், கூடுதலாக 8 M.V.A. திறன் கொண்ட இன்னுமொரு மின்மாற்றி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலே இருக்கின்ற மின் பளுவை ஆய்வு செய்து, 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியுடன் இயங்கி வருகின்ற அந்தத் துணை மின் நிலையத்தில் தேவைப்பட்டால் கூடுதலாக மற்றொரு 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆய்வு செய்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*